மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னது போல் இங்கே அம்பேத்கார், மாவட்டத்திலே தெற்குப்பேட்டை என்ற அந்த இடத்திலே மட்டும்தான் அரசுத்துறையிலே சந்தனத் தொழிற்சாலை வைக்க பட்டிருக்கின்றது. தனியார் தொழிற்சாலை ஆங்காங்கே வைக்கப்பட்டு நடத்தப்பட்டாலும் கூட இன்றைக்கு எங்கேயும் அது லாபகரமாக நடந்து கொண்டிருக்கக்கூடிய தொழிற்சாலை யாக இருப்பதாகத் தெரியவில்லை.

பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைத்தல்

* *3968* டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புகைவண்டி நிலையங்களில் இருப்பதுபோன்று மாநகராட்சி, நகராட்சி பேருந்து நிலையங்களில் டி. வி. வைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளின் பேருந்து நிலை யங்களில் மாநகராட்சிகளின் சட்ட விதிகளுக்குட்பட்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது. சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களையும் அரசு சார்ந்த போக்குவரத்துக் கழகங்கள் பராமரிக்கின்றன. எனவே சென்னை, மாநகராட்சியால் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் பொருள் எழவில்லை.

நகராட்சிப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி பேருந்து நிலையங்களில் பயணி கள் மணிக்கணக்காக பிரயாணம் செய்யும்போது காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு காத்திருக்கும் பிர யாணிகள் பொழுதுபோக்கிற்காவது டி.வி. பெட்டி வைப்பது நல்ல கருத்து என்பதை யாரும் மறுக்க முடியாது. புகைவண்டி நிலையம், மாநகராட்சி பேருந்து நிலையங்களில் இருப்பதுபோல், நகராட்சி பேருந்து நிலையங்களிலும் டி.வி. பெட்டி வைக்க துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

1990 மே 9]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நிமிடத்திற்கு, 5 நிமிடத்திற்கு பேருந்துகள் போய்க்கொண்டும், வந்துகொண்டும் இருக்கின்றன. எனவே அதில் எந்தப் பிரயாணிகள் தங்கியிருக்கிறார்கள், யார் யார் ரொம்ப நீண்ட நேரம் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் வர்ணிக்க முடியாது. புகைவண்டி நிலையம் என்பது நாழிகள் கழித்து வண்டிகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, பொருளாதார நிலையை ஒட்டியும், இது வைக்கப்பட அது சாத்தியக்கூறாக இருக்காது. எனவே, தற்போது அப்படிப்பட்ட திட்டமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொழுதுபோக்கிற்காக டி.வி. பெட்டி வைக்காவிட்டாலும், பஸ் எந்த நேரம் வருகிறது, எந்த பிளாட்பாரத்திலிருந்து புறப்படுகிறது என்று பிரயாணிகளுக்கு அறிவிக்கவாவது இந்த டி.வி. பெட்டிகள் பயன்படும். அதைக் கருத்திற்கொண்டாவது இந்த டி.வி. பெட்டியை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பெரிய பேருந்து நிலையங்களில் ஒலிபெருக்கி மூலம் அது அறிக்கப்படுகிறது. தேவைப்படுமாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த நகராட்சி பேருந்து நிலையங்களில் அது அத்தியாவசியமென கருதுகிறாரோ அதைத் தெரிவித்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, மதுரை போன்ற மாநகராட்சி பேருந்து நிலையத்தில் இவற்றை வைப்பது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலிலே சொன்னார்கள். ஆனால், ஏற்கெனவே தனியாருக்கு ஈரோடு பேருந்து நிலையத்திலே டி.வி. பெட்டி மூலம் விளம்பரம் செய்வதற்கும், பஸ்ஸுக்காகக் காத்திருக்கக்கூடியவர்கள் பொழுது போக்கிற்காகவும் என்ற முறையிலே தனியாருக்கு அது ஒரு வருமானம் என்கின்ற அடிப்படையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொருளாதார நிலையைப் பற்றிய ஒரு சங்கடத்தைச் சொன்னார்கள். தனியாருக்கே அதைத் தந்து நகராட்சிகளுக்கு வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவும், அதன் மூலம் மக்களுக்கு பொழுதுபோக்கவும், அறிவிப்பு செய்யவும் உண்டான ஒரு செயற் குறிப்பை நம்முடைய அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பெரியார்

பேருந்து நிலையம் மற்றும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் ஆகியவற்றில் தொலைக்காட்சிப் பெட்டிகளை அமைத்து விளம்பர அறிக்கை முதலானவைகளை அறிவிக்க, ஏலம் விடப்பட்டு உத்தரவு வழங்கவும் சிந்தனையுள்ளது. மாநகராட்சி பேருந்து நிலையங்கள், கோவை மாநகராட்சிப் பேருந்து நிலையங்களிலே மாநகராட்சி சட்ட விதிகளுக்குட்பட்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்யும் உரிமையை, பொது ஏலத்தில் விட முடிவு செய்யலாமா என்று மாமன்றம் ஒப்புதல் அளித்து அதைப் பற்றிய விவரங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. முடிந்தவுடன் அது ஏற்பாடு செய்யப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடிக்கை பார்த்து வீணாகி வருகின்ற தமிழ் சமுதாயம், வேடிக்கை பார்ப்பதன் காரணமாக பாமர மக்கள் பஸ்ஸை விட்டுவிட்டு பரிதவித்துக் கொண்டிருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் தற்போதைய கருத்தில் ஒன்றாகத் தான் பரிசீலனையில் இருக்கிறது.

தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் சர்க்கரை.

*5391 திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் எவ்வளவு சர்க்கரை ஒதுக்குகிறது ?

(ஆ) மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் சர்க்கரை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மத்திய அரசு தமிழகத்திற்கு சராசரியாக மாதம் 22,500 மெட்ரிக் டன் லெவி சர்க்கரை பொது விநியோகத்தின் மூலம் வழங்க ஒதுக்குகிறது.

(ஆ) மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் சர்க்கரை குறித்த விவரங்களை மத்திய அரசு இவ்வரசுக்கு தெரிவிப்பதில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS